வாக்குப்பதிவு முடிந்து சீல் வைக்கப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள்–

வாக்கு எண்ணும் மையங்களில் பலத்த பாதுகாப்புடன் வைப்பு!

துணை ராணுவப்படையினர் 24x7 கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்!

சென்னை, ஏப். 25- தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான வாக்குப் பதிவு நிறை வடைந்ததை யடுத்து, வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் சீலிடப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களில் வைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டின் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கும் நேற்று முன்தினம் ஒரே கட்டமாக தேர்தல் நடை பெற்றது. காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு சரியாக மாலை 6 மணிக்கு நிறைவடைந்தது. சுமார் 5 கோடியே 73 லட்சம் வாக்காளர்களுக்காக தமிழ்நாடு முழுவதும் 75 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டிருந்தன.

மாலை 6 மணிக்குள் வந்த வாக்காளர்களுக்கு டோக்கன் வழங்கப்பட்டு வாக்களிக்க அனுமதிக்கப்பட்டனர். தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்களின்படி, தமிழ்நாட்டில் 85 சதவீத வாக்குகள் பதிவாகியுள்ளன. அதிகட்சமாக கரூர் மாவட்டத்தில் 92 சதவீதத்திற்கும் அதிகமான வாக்குகளும், சேலம் மாவட்டத்தில் 91 சதவீதம் வாக்கு களும் பதிவாகி உள்ளன. குறைந்தபட்சமாக கன்னியாகுமரி மாவட்டத்தில் 76 சதவீதம் வாக்குகளும், சிவகங்கை மாவட்டத்தில் 77 சதவீதம் வாக்குகளும் பதிவாகி உள்ளன.

வாக்குகள் மே 4ம் தேதி எண்ணப்பட்டு, அன்றைய தினமே முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

இதனையொட்டி, தேர்தலில் பயன்படுத்தப்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனைத்தும் தமிழ்நாட்டில் உள்ள 62 வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டு பலத்த பாதுகாப்புடன் வைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் அதிகாரிகள் அதிகாரிகள், வாக்குச்சாவடி முகவர்கள் முன்னிலையில் இயந்திரங்கள் சீலிடப்பட்டு, பலத்த பாதுகாப்புடன் எடுத்துச் செல்லப்பட்டன. சென்னையில் 16 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்களும், அண்ணா பல்கலைக்கழகம், லயோலா கல்லூரி, இராணி மேரி கல்லூரி ஆகிய 3 இடங்களில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களுக்கு கொண்டு செல்லப்பட்டன. வாக்கு எண்ணும் மையங்களைச் சுற்றிலும் 4 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மே 4ம் தேதி வாக்கு எண்ணிக்கை நடைபெறும் வரை, வாக்கு எண்ணும் மையங்கள் 24 மணி நேரமும் சிசிடிவி கேமரா மூலம் கண்காணிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்குள் பாசிசம் வராமல் தடுக்க–

தி.மு.க. - 200 இடங்களுக்கு மேல் வெல்லும்!

பெரம்பலூர் – வேலூர் கிராமத்தில் வாக்களித்தபின் – ஆ.ராசா எம்.பி. பேட்டி!

பெரம்பலூர், ஏப். 25- கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா. எம்.பி.யின் சொந்த ஊரான, பெரம்பலூர் மாவட்டம், வேலூர் கிராமத்தில் வாக்கு செலுத்திய பின் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா.எம்.பி. செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:

தமிழ்நாட்டில் கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.க. அரசு நிறைவேற்றியுள்ள எண்ணற்ற அரசு திட்டங்களை கருத்தில் கொண்டும், முதல்வர் முத்துவேல்கருணாநிதி ஸ்டாலின் தமிழ்நாட்டில் செயல்படுத்தி வந்துள்ள வளர்ச்சித்திட்டங்களை பாராட்டும் விதத்திலும் அதுமட்டுமின்றி பாசிச சக்திகளை தமிழ்நாட்டிற்குள் விடாமல் தடுக்க மு.க.ஸ்டாலினால் மட்டுமே முடியும் என்ற நம்பிக்கையில் பெருவாரியான மக்கள் மிகுந்த எழுச்சியுடன் இன்று வாக்களித்து வருகின்றனர், எனது சொந்தக் கிராமத்திலும் அந்த எழுச்சியை காணமுடிகிறது.

கண்டிப்பாக பெரம்பலூர் மட்டுமல்ல தமிழ்நாட்டில் 200 க்கும் மேற்பட்ட தொகுதிகளில் தி.மு.க. வெற்றி பெறும்,

தமிழ்நாட்டில் இது வரை எந்த தேர்தலிலும் இல்லாத அளவிற்கு 2026 சட்டமன்ற தேர்தலில் வெளிமாநில முதல்வர்கள் மற்றும் வடமாநில பா.ஜ.க. அமைச்சர்கள் பா.ஜ.க. தலைவர்கள் என ஏராளமான பாசிச சக்திகள் தமிழ்நாட்டில் கூடாரம் அமைத்தும், கொட்டமடித்து கொண்டும் பிரச்சாரம் செய்து தமிழ்நாட்டை எப்படியாவது பிடித்து விடலாம் என்று நினைக்கிறார்கள், ஆனால் அவர்கள் எண்ணம் பலிக்காது, அவர்களை எல்லாம் தமிழ்நாட்டு மக்கள் ஓட,ஓட விரட்டி விட்டார்கள் என்பதை உறுதிபடுத்துவதற்கான செய்தி இந்த தேர்தலில் தெரிகிறது என்றார். இவ்வாறு அவர் கூறினார்.

இதில் மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், வேட்பாளர் டாக்டர் எஸ்.டி. ஜெயலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

சட்டப்பேரவைத் தேர்தல்கள் முடிந்தவுடன்

பெட்ரோல், டீசல் விலையை ரூ.25 உயர்த்தத் திட்டமா?

ஒன்றிய அரசு விளக்கம்!

புதுடெல்லி, ஏப். 25- சட்டப்பேரவை தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லை என ஒன்றிய அரசு உறுதிபட தெரிவித்துள்ளது. ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் நாடுகள் கடந்த பிப்ரவரி 28ம் தேதி போர் தொடுத்தன. இதற்கு பதிலடியாக உலக நாடுகளுக்கு கச்சா எண்ணெய் எடுத்து செல்லும் முக்கிய வழித்தடமான ஹார்முஸ் நீரிணையை ஈரான் மூடியது. இதன் காரணமாக கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டதுடன் விலையும் அதிகரித்தது. இதன் காரணமாக பொதுமக்களும், உணவக உரிமையாளர்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சூழலில் தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அசாம் ஆகிய 3 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்துக்கு பேரவை தேர்தல் அறிவிக்கப்பட்டது. இதில் மேற்குவங்கத்தில் மட்டும் வரும் 29ம் தேதி 2ம் கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இந்த தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

இதுகுறித்து கோடக் இன்ஸ்டிடியூஷனல் நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், "மேற்குவங்கம் போன்ற மாநிலங்களில் ஏப்ரல் 29ம் தேதி சட்டப்பேரவை தேர்தல் வாக்குப்பதிவு முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலை கடுமையாக உயரும். அதன்படி கச்சா எண்ணெய் பீப்பாய்க்கு 120 அமெரிக்க டாலருக்கு அருகில் உள்ள நிலையில், விலை லிட்டருக்கு ரூ.25 முதல் 28 வரை உயரும்" என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒன்றிய அரசு மறுப்பு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக ஒன்றிய பெட்ரோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் தன் எக்ஸ் தளத்தில், "கோடக் நிறுவனத்தின் அறிக்கை பொதுமக்களை அச்சத்திலும், பீதியிலும் ஆழ்த்துவது மற்றும் தவறாக வழிநடத்தும் செயலாகும். கடந்த 4 ஆண்டுகளாக சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்தாலும், இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்த்தப்படவில்லை.

சர்வதேச விலை உயர்வில் இருந்து மக்களை காப்பதற்காக ஒன்றிய அரசும், பொதுத்துறை உண்ணெய் நிறுவனங்களும் தொடர் நடவடிக்கைகளை எடுத்துள்ளன. எனவே, சட்டப்பேரவை தேர்தல் முடிந்தவுடன் பெட்ரோல், டீசல் விலையை உயர்த்தும் திட்டம் எதுவும் இல்லை" என விளக்கம் அளித்துள்ளது.

★ பெட்ரோல் லிட்டருக்கு ரூ.20 டீசல் லிட்டருக்கு ரூ.100 நஷ்டம்

மேற்காசியாவின் முன்னேற்றங்கள் குறித்த செய்தி மாநாட்டில் ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் இணை செயலர் சுஜாதா சர்மா கூறுகையில், "கச்சா எண்ணெய் மற்றும எல்பிஜி விலைகளில் தொடர்ந்து ஏற்ற, இறக்கங்கள் நிலவுகின்றன. மேற்காசியா சூழல்களால் இந்த விலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. பெட்ரோல், டீசல் போன்ற எரிபொருள்களை தயாரிக்கும் கச்சா எண்ணெய் விலை, நுகர்வோர் மற்றும் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த ஆண்டு பீப்பாய் ஒன்றுக்கு 70 அமெரிக்க டாலராக இருந்த கச்சா எண்ணெய், இந்த மாதம் சராசரியாக 113 டாலருக்கும் அதிகமாக இருந்தது. 2026 ஏப்ரல் நிலவரப்படி, உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வால், ஒன்றிய அரசுக்கு சொந்தமான எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோலில் லிட்டருக்கு 20 ரூபாயும், டீசல் லிட்டருக்கு 100 ரூபாயும் நஷ்டம் அடைகின்றனர். இந்த பெரும் நஷ்டம் காரணமாக எண்ணெய் நிறுவனங்களின் லாபம் குறைந்து, தினசரி ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும் சூழல் உள்ளது" என்றார்.

பொருளாதாரச் சீர்திருத்தம் மேற்கொள்ளாவிட்டால் பின்னடைவு!

பிரதமர் மோடிக்கு – பெர்ன்ஸ்டீன் ஆய்வு நிறுவனம் எச்சரிக்கை!

புதுடெல்லி, ஏப்.25- இந்தியப் பொருளாதாரம் அண்மைக் காலமாக அடைந்துள்ள வளர்ச்சியைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டுமானால், வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தித் துறையில் இந்தியா அதிரடியான கட்டமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று பெர்ன்ஸ்டீன் ஆய்வு நிறுவனம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பாக பிரதமர் நரேந்திர மோடிக்கு அந்த நிறுவனம் அனுப்பியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது: கடந்த 6 ஆண்டுகளில் கொள்கை முடிவுகள் சரியான திசையில் இருந்ததால், பொருளாதார நிலைத்தன்மை மற்றும் ஜிடிபி தரவரிசையில் இந்தியா முன்னேற்றம் கண்டுள்ளது.

எனினும், இந்த அண்மைக்கால வெற்றிகளைக் கண்டு நாம் மனநிறைவு அடைந்துவிடக் கூடாது. உலகளாவிய விநியோகச் சங்கிலி மாற்றமடைந்து வரும் வேளையில், இந்தியா தனது சீர்திருத்தங்களை வேகப்படுத்துவது அவசியம். இல்லாவிட்டால் இதுவரை ஈட்டிய பலன்களை இந்தியா இழக்க நேரிடும்.

இந்தியாவின் நடுத்தர வர்க்கத்தை உயர்த்திய சேவைத் துறைக்கு, தற்போது செயற்கை நுண்ணறிவு (ஏஐ) தொழில்நுட்பம் பெரும் சவாலாக உருவெடுத்துள்ளது. தானியங்கி முறையினால் நடுத்தர வர்க்க வேலைவாய்ப்புகள் பறிபோகும் அபாயம் உள்ளது. இந்தியா இத்தொழில் நுட்பத்தைப் பயன்படுத்துபவராக மட்டுமே இல்லாமல், அதை உருவாக்குபவராகவும் மாற வேண்டும்.

நாட்டின் 45 சதவீத உழைப்பாளர்கள், விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ள போதிலும், ஜிடிபிக்கு அவர்களின் பங்களிப்பு வெறும் 15 சதவீதமாக மட்டுமே உள்ளது. எனவே, விவசாயச் சட்டங்கள் திரும்பப் பெறப்பட்டாலும், இத்துறையில் சீர்திருத்தங்கள் இன்றி வளர்ச்சியை எட்ட முடியாது. வெறும் கடன் தள்ளுபடிகளும், மானியங்களும் நிரந்தரத் தீர்வாகாது.

அதேபோல், பெட்ரோலியத் தேவையில் 88 சதவீதத்தை இறக்குமதியை மட்டுமே நம்பியிருப்பது பலவீனமானது. மின்சார வாகனத் தொழில்நுட்பத்துக்கு விரைவாக மாறாவிட்டால், மீண்டும் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்களைச் சார்ந்திருக்கும் நிலை இந்தியாவுக்கு ஏற்படும்.

பல்வேறு மாநில அரசுகள் அறிவிக்கும் நேரடிப் பணப் பரிமாற்றத் திட்டங்களுக்காக ஆண்டுக்கு ரூ.1.7 லட்சம் கோடி முதல் ரூ. 2.5 லட்சம் கோடி வரை செலவிடப்படுகிறது. இது போன்ற செலவினங்கள் உள்கட்டமைப்பு முதலீடுகளைக் குறைத்து, பணவீக்கத்தை அதிகரிக்கும் அபாயம் உள்ளது. வளர்ந்து வரும் ஒரு நாட்டின் பொருளாதாரத்துக்கு இது நல்லதல்ல.

ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுத் துறைக்கான இந்தியாவின் முதலீடு ஜிடிபியில் 0.6 சதவீதமாக மட்டுமே உள்ளது. இது உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவு. இந்தியாவிடம் மூலதனம், திறமை, ஆர்வம் ஆகியவற்றுக்குக் குறைவில்லை. ஆனால் கடினமான முடிவுகளை உடனுக்குடன் எடுக்கும் துணிச்சலே இப்போதைய தேவை. இவ்வாறு அந்த கடிதத்தில் பெர்ன்ஸ்டீன் நிறுவனம் சுட்டிக் காட்டியுள்ளது.

அமெரிக்கா – ஈரான் 2ஆம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை

பாக். அமைச்சர் - அமெரிக்கத் தூதர் ஆலோசனை!

இஸ்லாமாபாத், ஏப். 25- அமெரிக்கா - ஈரான் இடையே 2ம் கட்ட அமைதி பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்வதற்கான முயற்சிகள் குறித்து பாகிஸ்தான் அமைச்சரும், பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதரும் இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் ஆலோசனை நடத்தினர்.

ஈரான் மீது அமெரிக்க மற்றும் இஸ்ரேல் படைகள் கடந்த பிப்ரவரி 28ம் தேதி போர் தொடுத்தன. ஈரானின் ராணுவ இலக்குகளைக் குறி வைத்து தாக்குதல் நடத்தின. இதையடுத்து ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியது. இதன் காரணமாக சர்வதேச சந்தையில் எரிபொருள் விலை கடுமையாக உயர்ந்தது.

அதன்பின் 2 வாரங்களுக்கு முன்பு போர் நிறுத்த அறிவிப்பை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார். அமெரிக்கா ஈரான் இடையே அமைதி பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியது. அதன்படி நடைபெற்ற முதல் கட்ட பேச்சுவார்த்தை கடந்த 11 மற்றும் 12ம் தேதிகளில் நடைபெற்றது. ஆனால், முடிவு எதுவும் எட்டப்படாமல் தோல்வியடைந்தது.

இந்நிலையில் 2 வார கால போர் நிறுத்தம் கடந்த புதன் கிழமை முடிந்தது. அமெரிக்கா ஈரான் இடையே 2ம் கட்ட பேச்சுவார்த்தை ஏற்பாடு செய்வதற்கான முயற்சியில் பாகிஸ்தான் இறங்கியது. இதனால் போர் நிறுத்தத்தைக் காலவரையறையின்றி நீட்டிப்பதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்தார்.

இந்நிலையில் அமெரிக்கா ஈரான் இடையே இந்த வார இறுதியில், 2ம் கட்ட பேச்சுவார்த்தை நடத்துவதற்கான முயற்சிகள் குறித்து பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் மொசின் நக்வி, பாகிஸ்தானுக்கான அமெரிக்க தூதர் நடாலி பேக்கரை இஸ்லாமாபாத்தில் நேற்று முன்தினம் சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது மேற்காசிய நிலவரம், 2ம் கட்ட பேச்சுவார்த்தைக்குத் தூதரக அளவிலான முயற்சிகள் குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அமெரிக்க அதிபர் ட்ரம் அறிவித்த போர் நிறுத்த நீட்டிப்பை, 'வரவேற்கத்தக்க முன்னேற்றம்' என நக்வி தெரிவித்தார். இருதரப்பு இடையே அமைதியான தீர்வு ஏற்பட பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் ராணுவ தளபதி அசிம் முனிர் ஆகியோர் அனைத்து முயற்சிகளும் எடுக்கின்றனர். இந்த 2ம் கட்ட பேச்சுவார்த்தை எப்போது நடைபெறும் என தெரியவில்லை. எனினும், நல்ல செய்தி வரும். 2ம் கட்ட பேச்சுவார்த்தை இன்று (வெள்ளி) நடைபெறும் என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

சீன தூதர் சந்திப்பு: இதற்கிடையே, பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பை, பாகிஸ்தானுக்கான சீன தூதர் ஜியாங் ஜைதாங் நேற்று சந்தித்தார். அப்போது பாகிஸ்தான் துணை பிரதமரும் மற்றும் வெளியுறவுத் துறை அமைச்சருமான இஷாக் தர் உட்பட பலர் இருந்தனர். இந்தச் சந்திப்பு குறித்து பாகிஸ்தான் பிரதமர் அலுவலகம் விடுத்த அறிக்கையில் கூறியதாவது: மேற்கு ஆசியா நிலவரம் குறித்து, பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் அமைதி முயற்சிகள் குறித்து சீன தூதர் ஜியாங் கேட்டறிந்தார்.

மேற்கு ஆசியாவில் அமைதியை ஏற்படுத்த பாகிஸ்தான் மேற்கொண்டு வரும் முயற்சிகளை அவர் பாராட்டினார். பாகிஸ்தான் சீன உறவுகள் முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருப்பது குறித்து பாகிஸ்தான் பிரதமர் திருப்தி தெரிவித்தார். இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

கோடை காலத்தையொட்டி மின்தேவை புதிய உச்சம்!

ஒரே நாளில் 21 ஆயிரம் மெகாவாட் பதிவு!

நடப்பாண்டில் 2வது முறையாக அளவைத் தாண்டியது!

சென்னை, ஏப். 25 - கோடைக்காலத்தையொட்டி தமிழகத்தில் மின் தேவை ஒரே நாளில் 21 ஆயிரம் மெகாவாட் பதிவாகியுள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தகவல் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் வெப்ப அலை வீசுவதால் பொது மக்கள் வெளியே செல்ல அச்சப்பட்டு வீட்டிலேயே முடங்கி கிடக்கும் நிலை உருவாகி உள்ளது. இதன் காரணமாக வீடுகளில் இருக்கும் ஏசி, மின் விசிறி, டிவி, ஃபிரிஜ் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்து வருகிறது. அதன்படி, நடப்பாண்டில் இம்மாதம் மின்சார தேவை வெகுவாக அதிகரித்துள்ளது.

முன்னதாக ஏப்ரல் 17ம் தேதி 21 ஆயிரத்தை தாண்டி மின் தேவை இருந்தது. இந்நிலையில் 2வது முறையாக ஏப்ரல் 21ம் தேதி (செவ்வாய்க் கிழமை) 21 ஆயிரத்தை தாண்டியுள்ளதாக மின் வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். குறிப்பாக கடந்த செவ்வாய்க் கிழமை இரவு 10.30 மணியளவில் அதிகப்படியான மின் தேவை ஏற்பட்டிருப்பது ஆச்சரியம் அளித்துள்ளது. உதாரணமாக ஏப்ரல் 21ம் தேதி மின்சார பயன்பாடு 462.38 மில்லியன் யூனிட்களாக இருந்தது. அதில் தமிழக மின்சார வாரியத்தின் நடவடிக்கையால் நிலக்கரி, எரிவாயு, ஹைட்ரோ பிளா ண்ட்கள் மூலம் 77 மில்லியன் யூனிட்கள் கிடைத்தன.

மத்திய பவர் பிளாண்ட்கள் மூலம் 127 மில்லியன் யூனிட்கள் பெறப்பட்டன. எஞ்சிய 86.5 மில்லியன் யூனிட்கள் வெளி சந்தையில் குறுகிய மற்றும் நீண்ட கால ஒப்பந்த அடிப்படையில் வாங்கப்பட்டவையாகும். இதுகுறித்து அதிகாரிகள் கூறியதாவது: இன்னும், கத்திரி வெயில் தாக்கம் தொடங்காத நிலையில் இது போன்ற தேவைகள் உருவாகி உள்ளது இது வாரியத்திற்கு ஒரு சவாலானது தான். காரணம் பள்ளி, கல்லூரிகள் விடுமுறை என்பதால் மாணவ, மாணவிகள் வீடுகளில் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே மின் விசிறி, ஏசி, கூலர் போன்றவற்றின் பயன்பாடு அதிகரித்துள்ளது. ஏற்கனவே அரசு அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், வர்த்தக கட்டடங்கள், பொழுது போக்கு கூடங்கள், மால்கள் உள்ளிட்டவற்றின் ஏசி பயன்பாடு அதிகமாக இருக்கும். இதனுடன் வீடுகளிலும் ஏசி பயன்பாடு அதிகரித்திருக்கிறது. முன்பு பணம் படைத்தவர்களின் வீடுகளில் இருந்த ஏசி மற்றும் ஃப்ரிஜ் போன்ற உபயோக பொருட்கள் இப்போது நடுத்தர குடும்பங்களிலும் வந்துள்ளதால், மின் தேவை என்பது இயல்பாகவே அதிகரிக்கும்.

அதனை சமாளிக்க தான் பல்வேறு வழிகளில் மாநிலத்தில் தடையின்றி மின்சாரத்தை வழங்குவதில் மின்வாரியம் முனைப்பு காட்டுகிறது. நிலக்கரி எரிபொருள் மட்டுமின்றி சூரிய சக்தியையை பயன்படுத்தி மின்சார தயாரிப்பை முடுக்கி விட்டுள்ளோம். இதுதவிர, சூரிய மின் சக்தி, காற்றாலை போன்வற்றில் இருந்தும் மின்சார தேவை பூர்த்தி செய்யும் வகையில் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேலும், கோடைகாலத்தை கருத்தில் கொண்டு பொதுமக்களும் சிக்கனமாக மின்சாரத்தை கையாளும் பட்சத்தின் மின்வெட்டு பிரச்சினை என்பது இருக்காது அதனையும் விழிப்புணர்வாக நுகர்வோரிடம் எடுத்து செல்ல திட்டமிட்டுள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

அதானே...

ஒற்றுமை சிதைந்து
கூட்டுக் குடும்பமுறை
குலைந்து
பராமரிப்பு இல்லாது
பாழடைந்து போன
பூட்டாத வீட்டு
பொக்கிஷங்களை
புதிது புதிதாக ஊருக்குள்
போவோரும் வருவோரும்
அள்ளிக் கொண்டு போவதும்..

மிடுக்குக் குறையாத
பொலிவோடு
பாதுகாக்கப்படும்
பங்களாவோ ஆனந்தமான
அடுத்த கொண்டாட்டத்திற்கு
ஆயத்தமாவதும்
இயற்கை தானே...





மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

என்னநாஞ் சொல்றது